செ.வெ. எண்: 233 நாள்: 27.03.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (27.3.2012) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தை தாக்கிய 'தானே' புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலமாக சுய உதவிக்குழு உறுப்பினர்களின் சொந்த பங்களிப்பு தொகையான 43 லட்சத்து 47 ஆயிரத்து 312 ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 143 கோடியே 43 லட்சத்து 42 ஆயிரத்து 567 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 27.3.2012